**IN THE COURT OF THE I-st ADDITIONAL DISTRICT COURT, RANIPET.**
**RANIPET DISTRICT.**
**DEPOSITION OF WITNESS**
**OS.No.9/2021 - PW-2**

| | |
|---|---|
| Name | திரு.பார்த்தசாரதி |
| Father Name | சுந்தரராஜன் |
| Village /Area | |
| Taluk | |
| Occupation | |
| Age | |
| Religion | |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 24.09.2024.

**முதல் விசாரணை**

நான் தற்போது ஆற்காடு நகர காவல் ஆய்வாளராக பணிபுரிகிறேன். இதற்கு முன்னர் ராணிப்பேட்டை நகர காவல் ஆய்வாளராக பணிபுரிந்தேன். ராணிப்பேட்டை காவல் நிலைய குற்ற எண்.1389/2020 வழக்கில் முதல் தகவல் அறிக்கையானது கிருஷ்ணமூர்த்தி, சத்தியா ஆகியோர் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ளது. அந்த முதல் தகவல் அறிக்கையின் நகல் தான் வா.சா.ஆ.17 ஆகும். அந்த புகாரை முத்துகிருஷ்ணன் என்பவர் கொடுத்தார். கிருஷ்ணமூர்த்தி ராணிப்பேட்டை நகர மன்றத்தலைவராக இருந்தார். இந்த குற்ற வழக்கில் நான் புலன் விசாரணை முடித்து எதிரிகள் கிருஷ்ணமூர்த்தி, சத்தியா மிது 12.10.2022 அன்று இ.த.ச பிரிவுகள் 406, 420, 423, 465, 468, 471 ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். சத்தியா மீது இராணிப்பேட்டை காவல் நிலையத்தில் சுமார் 10, 15 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு, அந்த வழக்குகளில் இறுதி அறிக்கையும் நான் தாக்கல் செய்துள்ளேன்.

**குறுக்கு விசாரணை 1ம் பிரதிவாதி தரப்பில் –**

1ம் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோள் பேரில் ஒத்திவைக்கப்பட்டது.

Sd/– M.Selvam, M.L.,
Additional District Judge,
Ranipet.